## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்

## வினா விடை நேரம்
## வினா எண் 323

## தலைப்பு "இறுதியானதை அடைவதையே நோக்கமாக மேற் கொள்ளுதல்"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 167-173 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.

கேள்வி:ஸ்வாமி அனுபவ ஞானம் என்றால் என்ன.நாங்கள் அறிந்து வைத்திருப்பதெல்லாம் ஞானம் ஆகாதா.

ஸ்வாமியின் பதில்:
நிச்சயமாக இல்லை.பரிதாபம் என்னவென்றால் உங்களுக்கு ஏதுவுமே தெரியாது என்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்வதேயில்லை.நீங்களோ உங்களுக்கு எல்லாம் தெரியும் என நினைத்து கொள்கிறீர்கள்.இது முட்டாள்தனமானது.உங்களுக்கு தெரிந்ததெல்லாம் வெறும் கையளவுதான்.நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது.
ஸ்வாமி ஒரு கைகுட்டையை எடுத்து கொண்டு அதனுடைய சிறு பகுதி மட்டும் வெளியே தெரியுமாறு பிடித்து கொண்டு கூறுகிறார் இது ஒரு சிறு துண்டு துணிதான்.இதை விரித்தால் அது கைகுட்டை.இந்த கைக்குட்டையின் சிறு துண்டு அளவே தான் நீங்கள் பெற்றுள்ள ஞானம்.முழுமையான ஞானம் இறுதி இலக்கை முழுவதுமாக உணர்ந்து அறிந்திருத்தல்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி ஒரு பக்தனுக்கு எப்போது அனுபவ ஞானம் கிட்டுகிறது.

ஸ்வாமியின் பதில் :
பக்தியானது முக்தியில் முழுமை பெறுகிறது.
அனுபவ ஞானம் என்றால் ஏகத்துவத்தில் நிலைத்து நிற்கின்ற பிரம்மானந்த நிலையாகும்.அதுவே நித்யானந்தம் எனப்படுகின்ற பேரானந்த பெருநிலையாகும்.
ஒரு நதி வளைந்து வளைந்து ஓடுகிறது.வழியில் என்ன தடை ஏற்பட்டாலும் இறுதி இலக்கான கடலை சென்று அடைகிறது.
கடலோ நதியை சுலபமாக சேர்த்து கொள்வதில்லைதள்ளி விடுகிறது.விரட்டி அடிக்கிறது.ஆனால் நதி தன்னுடைய முயற்சியை விட்டுவிடாமல் இறுதியில் கடலில் கலக்கிறது.இப்படி இரண்டற கலக்கும் போது நதி பேரமைதி பெருநிலையை அடைகின்றது.

ஒரு பக்தனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பும் இவ்வாறாகவே அமைய வேண்டும்.பக்தி பிரவாகமெடுத்து ஓடி இறைவனுடன் இரண்டறகலப்பதே சாதனாவாகும்.ஜீவாத்மா பரமாத்மாவுடன் பரிபூரணமாக ஒன்றி விடுவதே இறுதி இலக்காகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி ஞானம் என்றால் என்ன ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
ஞானம் என்பது ஏட்டு கல்வியால் பெறபடுவதல்ல.அது ஓர் உயர்ந்த பேரரிதலாகும்.ஞானம் என்பது வார்த்தைகளால் விளக்க முடியாதது.அது கல்லூரி கல்வியோ டாக்டர் பட்டமோ அல்ல.அனுபவ அறிவே ஞானமாகும்.
உண்மையில் ஞானம் என்பது உங்கள் குறைகள் குற்றங்கள் தவறுகளை நீங்களே உணர்ந்து கொண்டு அவைகளிலிருந்து விடுபட்டு திருத்திக்கொண்டு மீண்டும் அந்த தவறுகளை செய்யாமல் இருக்கச்செய்வதாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி மனித உடலில் உயிரின் ஆதார சக்தி எங்கே இருக்கிறது ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
நீங்கள் அது ஹிருதயத்தில் இருப்பதாக நினைக்கிறீர்கள்
ஆனால் இன்றைக்கு மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்து இதயத்தையே மாற்றி வைக்கிறார்கள்.அப்படி செய்யும் போது நோயாளி இறப்பதில்லையே.அதனால் இதயத்தில் எப்படி உயிர் சக்தி இருக்க முடியும்.உயிர் சக்தி என்பது முதுகெலும்பின் ஒன்பதாவது மற்றும் பனிரெண்டாவது அடுக்குகளுக்கு இடையே உள்ளது.இதுவே மெயின் சுவிட்ச் ஆகும்.
மந்திரபுஷ்பம் ஸ்லாகத்தில் இது பற்றி செயல்பட்டுள்ளது.ஒளிகீற்று போன்ற மின்சார சக்தியே உயிர் மையமாக செயல்படுகிறது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி வாழ்கையின் அடிப்படை கோட்பாடுகள் என்ன என்பது பற்றி எங்களுக்கு சொல்ல வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
குழந்தை பிறக்கும் போது அழுது கொண்டே பிறக்கிறது.ஏன் தெரியுமா.வாழ்க்கையில் தான் எதிர் கொள்ள வேண்டியிருக்கும் துன்பங்களையும் துயரங்களையும் நினைத்து அழுகிறது.ஒவ்வொரு உயிரும் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து கொண்டே இருக்கிறது.இதையே ஆதிசங்கர் புனரபி ஜனனம் புனரபி மரணம் என்கிறார்.
பிறப்பு ஒரு கேள்வியுடனேயே ஆரம்பமாகிறது.கோஹம்-நான் யார் என்பதே அந்த கேள்வி.அதனுடைய விடை ஸோஹம் அதாவது நான் அவரே-நான் கடவுளே என்பதாகும்.பிறவி முடிவதற்குள் அந்த விடையை தேடி கண்டு பிடித்தாக

வேண்டும்.அதற்கான வழி ஆன்மீக பயற்சிகளில் ஆன்மீக சாதனைகளில் தொடர்ந்து ஈடுபட்டு கொண்டே இருப்பதாகும்.
இந்த தேர்வை மீண்டும் மீண்டும் எழுதி கொண்டே இருப்பதில் அர்த்தம் இல்லை.

வாழ்கையை மூன்று கால அளவுகளாக பிரித்துக் கொள்ளலாம்.
காலை,மதியம் இரவு.
காலை என்பது பிறந்த குழந்தையை போல் இரண்டு கை இரண்டு கால்களால் தவழ்ந்து செல்வதாகும்.
மதியம் என்பது இரண்டு கால்களால் மட்டுமே நடந்து செல்கின்ற இளமை பருவமாகும்.
இரவு என்பது மூன்று கால்களால் அதாவது ஒரு வாக்கிங் ஸ்டிக் கின் உதவியுடன் நடக்கின்ற வயதான பருவமாகும்.
இளமை பருவம் என்ற அடித்தளத்தின் மீது தான் மூன்று மாடி கட்டடமான லௌகீக வாழ்கை சந்நியாச வாழ்க்கை முற்றும் துறந்த இறுதிநிலை வாழ்க்கை இவைகள் கட்டமைக்கப் படுகின்றன.
ஒரு மனிதன் ஐம்பது வயதை அடையும் போது தன்னுடைய கர்மேந்திரியங்களை கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்து விட வேண்டும்.
அறுபது வயதை அடையும் போது காம,குரோத,லோப,மோக,மத மாச்சர்யங்கள் என்ற எதிரிகளை வென்று விட வேண்டும்.
இவ்வாறு மன தூய்மை பெறும் போது அவர் சப்த ரிஷிகளை போல் சப்த ஸ்வரங்களை போல் சப்த சமுத்திரங்களை போல் மதிக்கப்படுகிறார். எண்பது வயதில் எட்டு வகையான யோகங்களிலும் தேர்ந்தவராக அஷ்டதிக் பாலகர்களாக போற்றபடுகின்றார்.தொண்ணூறு வயதில் நவவித பக்தியில் ஈடுபட்டு நவரத்தினமாக ஜொலிக்கிறார்.
நூறு வயதில் ஐந்து ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்களை அடக்கி ஆளுகின்ற நிபுணத்துவம் பெறுவதால் அவர் தெய்வீகத்தை ஆழ்ந்துணர்ந்து தெய்வமாகவே போற்றபடுகின்றார்.
ஒன்றை கவனிக்க வேண்டும்.
நீங்கள் எதை செய்தாலும் அது உங்களுக்கு மன திருப்தி தருவதாக இருக்க வேண்டும். நீங்கள் புதிய ஆடை அணிவது புதிய வீடு கட்டுவது எல்லாம் உங்களுடைய மகிழ்ச்சிக்காகத்தானே.
நீங்களே கடவுள் என்ற தெளிதல் உங்களுக்கு ஏற்பட வேண்டும்.
நீங்கள் ஒவ்வொருவரும் கடவுள் என்ற தெய்வீக இயக்குநர் நடத்துகின்ற நாடகத்தின் கதா பாத்திரங்களே.
சூத்ரதாரி கடவுள்.நீங்கள் பாத்ரதாரி.இந்த வாய்ப்பை நல்ல முறையில் நீங்கள் பயன் படுத்தி கொள்ள வேண்டும்.நற் பண்புகளுடன் வாழ்ந்து சமுதாயத்தில் நல்ல பெயர் எடுக்க வேண்டும்.
கடவுள் உன்னை பார்த்து நீ நல்லவன் என பாராட்ட வேண்டும்.இதுவே கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது.ஆசைகளை நிறைவேற்றி தருமாறு கடவுளிடம் வேண்டாதீர்கள்.கடவுளுடன் சேர்ந்திருப்பதையே -கடவுளுடன் கூடி இருப்பதையே ஒரே ஆசையாக வைத்து கொள்ளுங்கள்.

மற்றதெல்லாம் தானகவே உங்களுக்கு வந்து சேரும்.எளிமையான வாழ்க்கை வாழுங்கள்.

தென்னிந்தியாவில் வாழை இலையில் உணவு பரிமாறுவார்கள்.உணவு சாப்பிட்டு முடித்தவுடன் அந்த இலை காற்றில் பறக்கும்.
பழுத்த மரங்கள் அந்த பழங்களின் கனத்தினாலே குனிந்தபடி இருக்கும்.அது போல் உண்மையான பண்டிதர் அடக்கமும் எளிமையும் கொண்டவராக இருக்க வேண்டும்.
ஈரப்பதமற்ற மேகமோ உயரே உயரே செல்கிறது.மழை மேகமோ கீழே இறங்கி வருகிறது.காலி பாத்திரங்கள் தான் அதிக ஓசை உண்டாக்குகின்றன.அது போல் அதிக அகந்தை கொண்ட மனிதன் அழிந்து படுகிறான்.

வாழ்கையில் நீங்கள் நான்கு முக்கியமான கோட்பாடுகளை கடைபிடிக்க வேண்டும்.முதலாவது தீயவர்களை விட்டு தள்ளி இருங்கள்.
இரண்டாவது நல்லவர்களின் சேர்க்கையை நாடி இருங்கள்.
மூன்றாவது நித்யசத்தியத்திலிருந்து அநித்யத்தை கண்டு உணர்ந்து கொள்ளுங்கள்.அந்த பகுத்தறிவே கடவுள் மனிதனுக்கு கொடுத்துள்ள கொடையாகும்.
அழியகூடியதிலிருந்து சாஸ்வதமானதை மாறக்கூடியதிலிருந்து மாற்றமே இல்லாத சனாதனத்தை த்வைத்திலிருந்து அத்தைவதத்தை பிரித்து அறியுங்கள்.
நான்காவது அனைவருக்கும் நன்மை பயக்ககூடிய நற்செயல்களில் தினம் தினம் ஈடுபடுங்கள்.
பரோபகாரம் இதம் சரீரம். பிறருக்கு உதவுவதற்காகவே இந்த உடல் உங்களுக்கு கொடுக்க பட்டுள்ளது என்பதால் தொடர்ந்து சமுதாய சேவை பணி களில் ஈடுபட்டு வாருங்கள்.

அனைவருக்கும் நன்றி.

வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்

ஜெய் சாயிராம்